**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.97/2014**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி பி. கௌசல்யா, உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு சாட்சி 1 வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2021 ஆண்டு டிசம்பர் மாதம் 07 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் . | சிதம்பரம் | மதம் . |
| த/பெ . | முத்தப்ப முதலியார் | ஜாதி . |
| வயது . | 65 | கிராமம் . |
| தொழில் | | வட்டம் . |

**வாதி தரப்பு 1வது சாட்சியின் முதல் விசாரணை**

பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும். கடந்த **6.8.1981ல் கதிர்வேல் முதலி பெயருக்கு எழுதி கிரைய பத்திர சான்றிட்ட நகலை வா.த.சா.ஆ.1 குறியிடுகிறேன்.** 14.9.1983ல் கதிர்வேல் அண்ணாமலை என்பவருக்கு எழுதி கிரைய பத்திர அசல் வா.த.சா.ஆ. 2 குறியிடுகிறேன். 19.8.1991ல் என் பெயரில் உள்ள கிரைய பத்திரம் அசல் வா.த.சா.ஆ. 3 குறியிடுகிறேன். வில்லங்க சான்றிதழ் 1987 முதல் 2014 வரை வில்லங்க சான்றிதழ் வா.த.சா.ஆ. 4 குறியிடுகிறேன். layout வா.த.சா.ஆ. 5 குறியிடுகிறேன் (**எதிர் தரப்பு ஆட்சேபனையுடன் குறியிடப்படுகிறது**). வழக்கறிஞர் ஆணையர் அறிக்கை நீ.த.சா.ஆ. 1 குறியிடுகிறேன். சர்வேயர் அறிக்கை நீ.த.சா.ஆ. 2 குறியிடுகிறேன். அறிக்கையில் உள்ள FMB நீ.த.சா.ஆ. 3 குறியிடுகிறேன்.

**குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**